இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 46 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – புரட்டாசி 08 – செவ்வாய்க்கிழமை 24 செப்டம்பர் 2024 – கோவை ★★ 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 46: Thiruvalluvar Year - 2055 - Purataasi 08 - Tuesday 24 September 2024 - Kovai ★★ 8 Pages ₹ 5.00


## தோட்டக் கலைத் துறை சார்பில் - பொதுமக்கள் பயன்பாட்டிற்காக

# சென்னை - கிண்டியில் 118 ஏக்கரில் மிகப் பெரிய பூங்கா!

## ‘திராவிட மாடல்’ ஆட்சியில் அரசாணை வெளியீடு!

**சென்னை, செப்.24-**

**சென்னை, கிண்டியில் 118 ஏக்கர் பரப்பளவில் தோட்டக்கலைத் துறையின் சார்பில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக மிகச் சிறந்த பூங்கா, பசுமைவெளி மற்றும் பொதுமக்களுக்குத் தேவையான வசதிகள் உருவாக்கம்** (Creation of Public Horticultural Garden, Public Green Spaces and Public Utilities) **செய்திட தமிழ்நாடு அரசு ஆணை வெளியிட்டுள்ளது.**

இது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

சென்னை, கிண்டி ரேஸ் கிளப் நிறுவனத்திற்கு வெங்கடாபுரம், அடையாறு மற்றும் வேளச்சேரி ஆகிய இடங்களில் 160.86 ஏக்கர் நிலம் 1.4.1945-ஆம் தேதி முதல் 99 ஆண்டு காலத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டது. அரசிடமிருந்து கிண்டி ரேஸ் கிளப் நிருவாகத்திற்கு வழங்கப்பட்ட இந்த நிலம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தேவைப்படுவதால் தமிழ்நாடு அரசு குத்தகையை ரத்து செய்து, இந்த நிலத்தினை மீளப்பெற்று பொதுமக்கள் பயன்பாட்டிற்காக மிகச் சிறந்த பூங்கா, பசுமைவெளி மற்றும் பொதுமக்களின் இதர பயன்பாட்டிற்காக உருவாக்கம் செய்யப்படவுள்ளது.

எனவே, கிண்டியில் நிலக்குத்தகை ரத்து செய்யப்பட்டு அரசு சுவாதீனம் (possession) செய்யப்பட்ட நிலத்தில், பொதுமக்கள் பயன்பாட்டிற்காக மிகச்சிறந்த பூங்கா, பசுமை வெளி மற்றும் பொதுமக்களுக்கு தேவையான வசதிகள் அமைப்பதற்காக, அரசுப் புறம்போக்கு என்னும் வகைப்பாட்டில் இருக்கும்



ரூபாய் 4832 கோடி மதிப்பிலான 118 ஏக்கர் நிலத்தைத் தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறையின் நிலமாற்ற கோரிக்கையினை ஏற்று, அத்துறைக்கு நிலமாற்றம் செய்து, தமிழ்நாடு அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

**தனி மனிதருக்கான பசுமை நிலப் பகுதி!**

சென்னை மாநகரம் 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, 86.9 இலட்சம் மக்கள்தொகை கொண்டதாகவும், சென்னையில் ஒரு தனி மனிதருக்கான பசுமை நிலப் பகுதி (Per capita green cover) 1.03 சதுர மீட்டராகவும் உள்ளது. மேலும் சென்னைப் பெருநகரின் பசுமை வெளியானது, வனப்பகுதி, பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள், திறந்த வெளித்திடல்கள் என அனைத்தும் சேர்ந்து ஒட்டுமொத்தமாக சென்னையின் பரப்பில் வெறும் 6.7 சதவீதமாகத் தான் உள்ளது.

இது பிற இந்திய மாநகரங்களை ஒப்பிடுகையில் மிகவும் குறைவானதாகும். ஆகவே, சென்னையின் பசுமைப் பகுதியை அதிகரிக்க வேண்டிய தேவையின் அடிப்படையிலும், சென்னை நகரமயமாக்குதலால், மக்கள் தொகை அடர்த்தி மற்றும் மக்கள் தொகை பெருகிவரும் சூழ்நிலையினை கருத்தில் கொண்டு பூங்காக்கள் மற்றும் பசுமைவெளிகளை உருவாக்க வேண்டியது அத்தியாவசியமாகியுள்ளது. சென்னைவாழ் மக்கள் தங்கள் உடல்நலனிற்காகவும், உடற்பயிற்சிக்காகவும், பொழுதுபோக்கிற்காகவும் போதுமான பொது இடங்களை உருவாக்க வேண்டிய நோக்கத்துடன், நடைப்பயிற்சி, சைக்கிள் பயிற்சி, உடற்பயிற்சி உள்ளிட்ட பயிற்சிகளை மேற்கொள்ள பசுமையான சூழலைக் கொண்ட பூங்காக்கள் அவசியம் ஆகும்.

**அரசின் முக்கியப் பங்கு!**

ஆகவே, இதுவரை பூங்காக்கள் அமைக்கப்படாத இடங்களில் புதிய பூங்காக்களை உருவாக்க வேண்டியுள்ளது. சென்னை நகரில் ஒரு பெரிய அளவிலான பூங்காவினை உருவாக்குவது சுற்றுச்சூழல் நிலைத்தன்மையையும், பொது சுகாதாரத்தையும் மேம்படுத்துகிறது. மேலும், சென்னை நகரத்தில் வசிப்பவர்களின் ஒட்டுமொத்த வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் மற்றும் எதிர்காலச் சந்ததியினருக்கு ஏராளமான நன்மைகளை உருவாக்கிடவும், பசுமையான இடங்களை உருவாக்கி, பொதுப் பூங்காக்களைப் பராமரிப்பதன் மூலம் எதிர்காலச் சந்ததியினரை பாதுகாப்பதிலும் அரசின் முக்கியப் பங்கு உள்ளது.

பூங்காக்கள் மக்களின் உடல், மன நல ஆரோக்கியத்துக்கு குறிப்பிடத்தக்க அளவில் பங்களிக்கின்றன:

மன அழுத்தம், மனச்சோர்வு, பதற்றம் ஆகியவற்றைக் குறைத்து மனதுக்கு அமைதியைத் தருபவை பூங்காக்கள்.

உடல்பயிற்சிகளை ஊக்குவிக்கவும், அமர்ந்த நிலையிலேயே அதிக நேரத்தைச் செலவிடும் வாழ்வியல் சூழலில் ஆரோக்கியம் பேணவும் பூங்காக்கள் கைகொடுக்கும்.

சிறார்கள் ஓடியாடி விளையாடுவதற்குப் போதுமான இட வசதியை அளிக்கும்.

சுத்தமான காற்றைத் தரும், வெப்ப நிலையை ஒழுங்குபடுத்தும், ஆரோக்கியமான சமுதாயம் அமைந்திட உதவும்.

நகரத்தின் வெப்பமான சூழலைத் தணிக்கும் மற்றும் வெள்ளப் பாதிப்பினை குறைக்கும்.

மக்கள் நெருக்கம் மிகுந்த சென்னையில், உடல் ஆரோக்கியத்திற்கு அவசியமான சுத்தமான காற்றை வழங்கும் பூங்காக்கள் மக்கள் ஒன்று கூடவும், அவர்களின் உடல், மன நல ஆரோக்கியத்தைப் பேணவும், அத்துடன் சுற்றுச்சூழலைச் சீராகப் பராமரிக்கவும் உதவும்.

மாநகரத்தின் மக்கள்தொகைப் பெருக்கத்துக்கு ஈடுகொடுத்திடும் வகையில் மிகச் சிறந்த சுற்றுச்சூழல் பூங்கா ஒன்றினை சென்னையின் மத்திய பகுதியான கிண்டியில் நிறுவுதல் மிக அவசியமானது. இங்கு அமைக்கப்படவுள்ள பூங்காவானது, மக்களது மன மகிழ்ச்சிக்கும், அமைதிக்கும், ஓய்வுக்கும் ஒட்டுமொத்த வாழ்க்கைத் தரத்தை மெருகேற்றுவதற்கும் வழிவகுக்கும்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, சென்னையின் சுற்றுச்சூழலைப் பேணும் வகையில் ஏற்கனவே தனியார் அமைப்புகளிடம் இருந்த அரசு நிலங்களை மீட்டு தோட்டக்கலைத் துறையின் மூலம் சென்னை, கதீட்ரல் சாலையில் கலைஞர் நூற்றாண்டு பூங்காவும், நீலகிரி மாவட்டம், ஊட்டியில் ஒரு பூங்காவும் உருவாக்கப்பட்டு வருகிறது. அதேபோல், தற்போது சென்னை, கிண்டியில் மிகப்பெரிய பரப்பளவில் உருவாக்கப்பட உள்ள இந்த பூங்கா, பொதுமக்களுக்கும் சுற்றுச் சூழலுக்கும் உகந்ததாக அமையும்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

---

## தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் – ரூ.4.66 கோடியில்

# கலைஞர் நூற்றாண்டு உணவுப்பொருள் சோதனைக் கூடம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

*சென்னை, செப்.24-*

*முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்தில் நேற்று (23.9.2024) அரசுத்துறை சார்பில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள், தஞ்சை மாவட்டத்தில் மினி டைடல் பூங்கா ஆகியவற்றைத் திறந்து வைத்தும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் சார்பில் பணியிடங்களுக்குத் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளையும் வழங்கினார்.*

*இது பற்றிய விவரம் வருமாறு:-*

*முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னை, தலைமைச் செயலகத்தில் நேற்று (23.09.2024, திங்கட்கிழமை) காலை 10.15 மணியளவில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் ரூ.4.66 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு உணவுப்பொருள் சோதனைக் கூடம், ரூ.17.04 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 4 சேமிப்பு கிடங்கு வளாகங்கள், ரூ36.25 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 58 நேரடி நெல் கொள்முதல் நிலைய கட்டடங்கள் மற்றும் கூட்டுறவுத் துறை சார்பில் ரூ.15.22 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்களைத் திறந்து வைத்து, நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 110 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.*

*சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை சார்பில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக உதவி வனப்பாதுகாவலர் பணியிடத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட 9 நபர்களுக்கும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் உதவிப் பொறியாளர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 48 நபர்களில், 5 நபர்களுக்கும் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.*

**தஞ்சை மாவட்டத்தில் மினி டைடல் பூங்கா!**

*மேலும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில், தமிழ்நாட்டிலுள்ள சிறு நகரங்களுக்கு தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியினை கொண்டு செல்லும் நோக்கத்துடன் தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் தாலுகா, பிள்ளையார்பட்டி கிராமத்தில் 30.50 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்*

*மற்றும் சேலம் மாவட்டம், ஓமலூர் தாலுகா, ஆனைக்கவுண்டன்பட்டி மற்றும் கருப்பூர் கிராமத்தில் 29.50 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ள மினி டைடல் பூங்காக்களை திறந்து வைத்தார்.*

---

## ‘நீட்’ வினாத்தாள் கசிவு வழக்கு:

# ஜார்க்கண்ட் நீதிமன்றத்தில் இரண்டாவது குற்றப்பத்திரிகை!

## சி.பி.ஐ. தாக்கல் செய்தது!

*ராஞ்சி, செப். 24 -*

*நாடு முழுவதும் நீட் தேர்வு நடைபெற்ற கடந்த மே 5ஆம் தேதி பீகார் தலைநகர் பாட்னாவிலுள்ள தனியார் பள்ளி விடுதியில் எரிந்த நிலையில் நீட் வினாத்தாளை பீகார் போலீசார் கைப்பற்றினர்.*

*இதனைத்தொடர்ந்து, பீகார் பொருளாதார குற்றப் பிரிவு போலீசார் நடத்திய விசாரணையில் ஜார்க்கண்ட் மாநில பள்ளியில் கேள்வித்தாள் கசிந்தது கண்டறியப்பட்டது. குஜராத், ராஜஸ்தான், டெல்லி உள்ளிட்ட பல இடங்களில் நீட் மோசடி அம்பலமானதை தொடர்ந்து நாடு முழுவதும் போராட்டம் வெடித்தது.*

*இதையடுத்து, நீட் மோசடி வழக்கு சி.பி.ஐக்கு மாற்றப்பட்டது. இந்நிலையில், நீட் வினாத்தாள் கசிவு வழக்கில் ஜார்க்கண்ட் நீதிமன்றத்தில் இரண்டாவது குற்றப்பத்திரிகையை சி.பி.ஐ. தாக்கல் செய்துள்ளது.*

*நீட் தேர்வு ஒருங்கிணைப்பாளர், தனியார் பள்ளி முதல்வர் உள்ளிட்ட 6 பேர் முக்கிய குற்றவாளிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர். தனியார் பள்ளியிலிருந்து திருடிய வினாத்தாள் பாட்னா, ராஞ்சி, பரத்பூர் ஆகிய மருத்துவக்கல்லூரிகளில் படித்து வரும் மருத்துவ மாணவர்கள் மூலம் விடை காணப்பட்டு, நீட் தேர்வு எழுதிய மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.*

*இதற்கு லட்சக்கணக்கில் பணம் பெறப்பட்டுள்ளது. நீட் மோசடி வழக்கில் இது வரை 48 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக சி.பி.ஐ. தெரிவித்துள்ளது. 150 மருத்துவ மாணவர்கள் நீட் கேள்வித்தாள் கசிவு மூலம் பயன் அடைந்து இருக்கலாம் என்றும் சி.பி.ஐ. கூறியுள்ளது.*

---

## சிறுபான்மையினர் மற்றும்

# கிறிஸ்தவர்களின் நலன் காத்த தளகர்த்தர்!

## பேராயர் எஸ்றா சற்குணம் மறைவுக்கு

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, செப்.24-**

**“சிறுபான்மையினர் மற்றும் கிறிஸ்தவர்களின் நலன் காக்கும் தளகர்த்தராகச் செயல்பட்டவர் பேராயர் எஸ்றா சற்குணம் அவர்கள்” என்று அவரது மறைவு குறித்து கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

இசிஜ திருச்சபையின் பேராயரும், இந்திய சமூகநீதி இயக்கத்தின் தலைவருமான எஸ்றா சற்குணம் அவர்கள் உடல்நலக் குறைவால் மறைவுற்றார் என்ற செய்தியறிந்து மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன்.



திராவிட இயக்கக் கருத்தியலுடன் பின்னிப் பிணைந்த பேராயர் எஸ்றா சற்குணம் அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடன் நெருக்கமான நட்பும், அன்பும் கொண்டிருந்தவர். கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகளில் தலைவர் கலைஞரோடும் என்னோடும் பங்கேற்றவர். அவரது பிறந்தநாள் அன்று நடைபெறும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகளில் பங்கேற்று அவருடன் கருத்துகளைப் பரிமாறிக் கொண்ட தருணங்கள் இந்நேரத்தில் என் நெஞ்சில் நிழலாடுகிறது.

**என்னிடம் மாறாத அன்பு கொண்டவர்!**

பேராயர் எஸ்றா சற்குணம் அவர்கள் மாறாத அன்போடு என்னுடனும் பழகியவர். என்னுடைய பிறந்தநாளில் மட்டுமல்லாது, மக்களுக்கான திட்டங்களைச் செயல்படுத்தும் போதும் என்னை வாழ்த்தத் தவறாதவர்.

பேராயர் எஸ்றா சற்குணம் அவர்கள், கிறித்தவ மக்களின் நம்பிக்கைக்குரிய வழிகாட்டியாகவும் - அவர்களின் நலன் பேணும் தளகர்த்தராகவும் செயல்பட்டு வந்ததோடு, அனைத்துச் சமூக மக்களின் நன்மதிப்பையும் பெற்றவர்.

சிறுபான்மையினரின் நலன் பாதுகாக்கப்படவும், அவர்களது உரிமைகள் வென்றெடுக்கப்படவும் தம் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டு வந்த பேராயர் எஸ்றா சற்குணம் அவர்களின் மறைவு, கிறித்தவப் பெருமக்களுக்கு மட்டுமின்றி, சமூகநீதியின்பால் அக்கறை கொண்ட அனைவருக்கும் நேர்ந்த பேரிழப்பாகும்.

அவரை இழந்து வாடும் இசிஜ திருச்சபை நிர்வாகிகள் உறுப்பினர்களுக்கும், இந்திய சமூகநீதி இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கும், குடும்பத்தினர் உறவினர் மற்றும் நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.